சார்பு நீதிமன்றம், விருதுநகர்

M.C.O.P.No: 137/2020 Date: 19.11.2024

மனுதாரரின் தரப்பு சாட்சி–1(Pw1) வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திருமதி.சேர்மக்கனி, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜலட்சுமி | சாதி | : | -- |
| க/பெ | : | சீனிவாசன் | சமயம் | : | -- |
| கிராமம் | : | அசட் பிளாசிட் | தொழில் | : | |
| மாநிலம் | : | கர்நாடகா | வயது | : | 51 |

<u>முதல் விசாரணை –</u>

இம்மனுவில் மனுதாரர். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை என் சாட்சியத்தின் ஒரு பகுதியாக வாசித்துக்கொள்ள வேண்டுகிறேன். முதல் தகவல் அறிக்கை கணினி நகல் **ம.சா.ஆ.1.** லைசாண்டர் மருத்துவமனை டிஸ்சார்ஜ் சம்மரி அசல் **ம.சா.ஆ.2.** மருத்துவ பில்கள் தொகுப்பு மற்றும் பல் சிகிச்சை செய்ததற்கான மருத்துவ பில்கள் அசல் **ம.சா.ஆ.3(வரிசை)**. சம்பள சான்றிதழ் அசல் **ம.சா.ஆ.4**. என்னுடைய வங்கி கணக்கு புத்தகம் ஜெராக்ஸ் **ம.சா.ஆ.5**. பான் கார்டு ஜெராக்ஸ் **ம.சா.ஆ.6.** ஆதார் அடையாள அட்டை ஜெராக்ஸ் **ம.சா.ஆ.7**. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

எனக்கு மனு விபரங்கள் தெரியும். விருதுநகரில் விபத்து நடந்த காரணத்தினால் விருதுநகர் அரசு போக்குவரத்து கழகத்தை எதிர்மனுதாரராக சேர்த்துள்ளேன். எதிருரையில் சொல்லப்பட்டுள்ள

விபரங்கள் எனக்கு தெரியும். நாகர்கோவில் கோட்ட வாகனம் விபத்தில் ஈடுப்பட்டதாக எதிருரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்று சொன்னால் அவசியமில்லை. நாகர்கோவில் கோட்ட பேருந்து விபத்தில் ஈடுபட்டதை நான் மறுக்கவில்லை என்றால் சரிதான். அந்த வாகனத்தின் ஓட்டுநரும் திருநெல்வேலி கோட்டத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அதனால் எனது மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.